***சார்பு நீதிமன்றம், உதகமண்டலம்.,***
***.முன்னிலை : திரு. சி.ஸ்ரீதர், பிஎஸ்சி, பி.எல்***
***சார்பு நீதிபதி, உதகமண்டலம்.***

***2023-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 03-ஆம் நாள் செவ்வாய்க்கிழமை***

***அசல் வழக்கு எண்.100/2018***

பாப்பாத்தி ... வாதி

/ எதிர்/

01. சந்தோஷ்குமார்
02. ராஞ்சித்குமார்
03. கே.என்.பழனிசாமி
04. திருமதி. ஹசீனா ஹசன்
05. திருமதி.ஜெயினாப் பாய் ... பிரதிவாதிகள்

இவ்வழக்கு கடந்த 20.09.2023-ஆம் தேதி இறுதியாக என் முன்பு விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு, வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் **திருமதி. ஆர்.ரேவதி**, அவர்களும், 01, 02 மற்றும் 03-ஆம் பிரதிவாதிகள் தோன்றாதரப்பினர்களாகவும், 04 மற்றும் 05-ஆம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் **திருமதி.கே.மேனகா**, அவர்களும் முன்னிலையாகியும் எடுத்துரைத்த வாதுரையை கேட்டும் வழக்கு கோப்புக்களை ஆராய்ந்தும், இரு தரப்பு வாதுரையை கேட்டறிந்த பின்பும் இதுநாள் வரை இந் நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந் நீதிமன்றம் வழங்கிடும்:

## ***தீர்ப்புரை***

இந்த தாவாவானது வாதி இந்த பிரதிவாதிகளுக்கு எதிராக மூன்றில் ஒரு பாகத்தை பொறுத்து முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கக்கோரி இந்த தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

***வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குரையின் சுருக்கம் பின்வருமாறு:***

**01.** இந்த வழக்கின் 01 மற்றும் 02 பிரதிவாதிகள் இந்த வாதியின் கணவரான திரு.பி.சின்னசுவாமி என்பவரின் முதல் மனைவியின் மகன்கள் என்றும், மேற்படி சின்னசுவாமியின் முதல் மனைவி லேட்.எஸ்.சரோஜா என்பவர் 27.11.2002-ஆம் தேதியில் இறந்துவிட்டதாகவும், மேலும் மேற்படி சின்னசுவாமி என்பவர் அவர் பல்வேறு காலக்கட்டங்களில் 15.09.2005, 30.06.2004, 27.09.2004, 21.11.2003 13.02.2012, 08.06.2000 மற்றும் 26.09.2000-ஆம் தேதிகளில் தாவா சொத்துக்களை அனைத்தும் கிரையம் பெற்று அவரே தனிப்பட்ட முறையில் எந்தவொரு இடையூறும் இன்றி அனுபவம் செய்து வந்ததாக குறிப்பிட்டுள்ளார். மேலும் இந்த வாதி, சின்னசுவாமி என்பவரை திருமணம் செய்வதற்கு முன்பாக ஒரு ஜோசப் ஸ்டான்லி என்பவரை திருமணம் செய்து அவர்களுக்கு இடையேயான திருமணம் IDOP.No.17/2005 என்ற எண்ணில் மாண்புமிகு உதகை மாவட்ட நீதிமன்றத்தில் அனுமதிக்கப்பட்டு திருமணம் இரத்து செய்யப்பட்டதாகவும், அதற்கு பின்னிட்டு 20.12.2006-ஆம் தேதியன்று இந்த வாதி உதகையில் வனசரகராக பணிபுரிந்த திரு.பி.சின்னசுவாமி என்பவரை திருமணம் செய்து மேற்படி திருமணத்தை பதிவு அலுவலகத்தில் பதிவு செய்ததாகவும், பின்னிட்டு வாதியும் அவரது கணவர் சின்னசுவாமியும் மேல்கூடலூரில் OVH ரோடு, கதவு எண் 1/319 என்ற வீட்டில் 10 வருடங்களுக்கு மேலாக வசித்து வந்த நிலையில், மேற்படி சின்னசுவாமி 19.02.2016-ஆம் தேதியன்று இறந்துவிட்டதாகவும், அதற்கு பிறகு மேற்படி சின்னசுவாமியின் மகன்களான 01 மற்றும்

02-ஆம் பிரதிவாதிகள் வாதியை இரக்கமின்றி வீட்டை விட்டு துரத்திவிட்டதாகவும், தற்போது வரை மேற்படி வீட்டிற்கான சொத்து வரி மற்றும் வீட்டு வரி இரசீதுகளை மேற்படி சின்னசுவாமியின் பெயரியல் வாதி செலுத்தி வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

**02.** மேற்படி சின்னசுவாமி, வாதி மற்றும் 01, 02 பிரதிவாதிகளை வாரிசாக விட்டுவிட்டு இறந்துவிட்டதால், வாதியும், 01, 02 பிரதிவாதிகளும் உரிமைதாரர்கள் என்ற முறையில், தாவா சொத்தை அனுபவம் செய்து வருவதாகவும், ஆனால் கடந்த 2 வருடங்களாக வாதி தனியாக வசித்து வருவதாகவும், மேற்படி சின்னசுவாமி உயிருடன் இருந்த காலத்தில் வாதியுடன் கதவு எண்.1/319 என்ற வீட்டில் எவ்வித இடைஞ்சலுமின்றி வசித்து வந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். மேற்படி தாவா சொத்தின் சர்வே எண்.506/1A3, H/6/107, 509/2 மற்றும் 506/1A -ல் 10 சென்ட் நிலம் மற்றும் சர்வே எண் 1244/4A உள்ள 3.75 சென்ட் நிலம் மற்றும் கதவு எண்.4/195 என்ற வீட்டு இடமும் மற்றும் கூடலூரில் சர்வே எண்.106/3-ல் உள்ள 2663 சதுரடி நிலம் மற்றும் ஈரோட்டில் நிலங்கள் அமைந்துள்ளதாகவும், அதனால்இந்த நீதிமன்றத்தில் வழக்கை தாக்கல் செய்ததாகவும் கூறி தாவா சொத்தில் மூன்றில் ஒரு பாகத்தை பிரித்து தர முதல்நிலைத் தீர்பாணை கோரி இந்த தாவா தாக்கல் செய்துள்ளார்.

***01-ஆம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம் பின்வருமாறு:***

**03.** இந்த வாதி அவர் வழக்குரையில் குறிப்பிட்டுள்ள அவரது பெயரே தவறானது என்றும், உண்மையிலேயே இந்த வாதியின் பெயர் சம்ருனிஷா என்றும், அவர் ஒரு முகமதிய சமூகத்தை

சார்ந்தவர் என்றும், வாதியின் தந்தை பெயர் முகமது உஷைன் மற்றும் தாயார் பெயர் ஆயிஷம்மா என்றும், மேலும் இந்த வாதியும் முகமதியாக இருந்து கிறிஸ்த்துவ மதத்திற்கு தழுவி அதற்கு பிறகு இந்து மதத்திற்கு தழுவியபோது மதம் மாறும்போது பின்பற்றவேண்டிய அவசியமான சடங்குகள் மற்றும் விதிகளை பின்பற்றினார் என்பதை பற்றிய அவசியமான சங்கதிகளை இந்த வழக்கில் கூறாதது வாதியின் இந்த வழக்கை பாதிக்கத்தக்கது என்றும், அவர் இந்த வழக்கிற்கு தகுந்தாற்போல் மேற்படி சங்கதிகளை மறைத்து வழக்குரையில் தன்னுடைய பெயரை மாற்றி வைத்துள்ளார் என்றும், மேற்படி தாவா சொத்துக்கள் சின்னசுவாமியின் தனிப்பட்ட சொத்துக்கள் என்பது பொய்யானது என்றும், இந்த 01-ஆம் பிரதிவாதியின் தாயார் திருமதி.சரோஜா என்பவருக்கு சொந்தமான கட்டடம் திருச்சி காட்டூரில் இருந்ததை மேற்படி 01-ஆம் பிரதிவாதியும், அவரது தந்தையும் மற்றும் 02-ஆம் பிரதிவாதியும் கூட்டாக 2005-ஆம் வருடத்தில் சுமார் ரூ.50 இலட்சத்திற்கும் மேல் மூன்றாம் நபர்களுக்கு விற்பனை செய்து அதன்மூலம் வந்த பணத்தை வைத்து மேற்படி தாவா A, B அட்டவணையில் உள்ள 1 முதல் 4 சொத்துக்கள் மற்றும் தாவா C அட்டவணையில் உள்ள 5-வது சொத்தை தன்னுடைய தந்தை சின்னசுவாமி பெயரில் வாங்கியதாகவும், மேலும், தாவா C அட்டவணையில் உள்ள 6, 7 சொத்துக்களை தன்னுடைய தாயாரின் நகைகளை விற்பனை செய்து அதன் மூலம் வந்த பணத்தை கொண்டு சின்னசுவாமியின் பெயரில் கிரையம் வாங்கியதாகவும், மேற்படி சொத்துக்களை கிரையம் வாங்கும் அளவிற்கு மேற்படி சின்னசுவாமிக்கு எவ்வித பணமும் இல்லை என்றும், மேலும் மேற்படி சின்னசுவாமி தன்னுடைய குடும்பத்தையே நடத்துவதற்கு

மிகவும் சிரமமப்பட்டார் என்றும், மேற்படி தாவா சொத்தை வாங்கும் அளவிற்கு சின்னசுவாமிக்கு வசதி இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும் இந்த வாதி இதற்கு முன்பாக ஒரு ஜோசப் ஸ்டான்லி என்பவரை திருமணம் செய்து அவரது திருமணத்தை IDOP.No.17/2005 என்ற எண்ணில் உதகை மாவட்ட நீதிமன்றத்தின் மூலம் விவாகரத்து பெற்ற பிறகு சின்னசுவாமி என்பவரை 20.10.2006-ஆம் தேதியன்று திருமணம் செய்து கொண்டு கதவு எண்.1/319, OVH ரோடு, மேல் கூடலூரில் சுமார் 10 வருடங்களாக சின்னசுவாமி இறக்கும் வரை வாழ்ந்ததாக கூறுவது பொய்யானது என்றும், மேலும் இந்த வாதி ஜோசப் ஸ்டான்லி என்பவரை திருமணம் செய்ததாக கூறுவது பொய்யானது என்றும், மேலும் அவ்வாறு திருமணம் செய்து இருந்தாலும், இந்த வாதி மற்றும் ஜோசப் ஸ்டான்லி சம்மந்தப்பட்ட மதங்களை பொறுத்து மத சட்டவிதிகளுக்கு உட்பட்டு நடந்ததா? என்பதை பொறுத்து எவ்வித சங்கதிகளும் இல்லை என்றும், மேலும் மேற்படி மாவட்ட நீதிமன்றத்தில் பெற்ற விவாகரத்தானது வாதியால் தவறான சங்கதிகளை கூறியும், உண்மை சங்கதிகளை மறைத்தும் மேற்படி பிரதிவாதிகளிடமிருந்து சொத்தை அபகரிக்கவேண்டி பெறப்பட்டது என்றும், மேலும் பிரதிவாதியின் தந்தை இந்த வாதியிடம் தவறான உறவுமுறையில் இருந்து வந்ததாகவும், மேலும் ஜோசப் ஸ்டான்லி என்பவர் பெயர் அளவிற்கு தான் கணவர் என்றும், உண்மையிலேயே, மேற்படி ஜோசப் ஸ்டான்லி குடிபழக்கத்திற்கு அடிமையானவர் என்றும், அவர் இந்த வாதி மற்றும் பிரதிவாதிகளின் தந்தை இருவரும் தவறான உறவில் இருந்ததை அனுமதித்தார் என்றும், மேலும் அவர்கள் இருவரும் ஒன்றாக தூங்கி உடல்உறவில் ஈடுபடுவதை அனுமதித்தும், அவர்கள் இருவரும்

ஒரே அறையில் தூங்கும்போது மேற்படி ஜோசப் ஸ்டான்லி குடிபோதையில் வீட்டின் வெளியே படுத்து உறங்கி வந்துள்ளார் என்றும், மேற்படி பிரதிவாதியின் தந்தை சின்னசுவாமி வாதியிடம் தவறான உறவுமுறையில் இருந்த சமயத்தில் தான் வாதியின் தந்தையிடமிருந்து சின்னசுவாமி தாவா B அட்டவணை சொத்தை கிரையம் பெற்றார் என்றும், அதனால் இந்த வாதி மேற்படி சின்னசுவாமியின் வப்பாட்டி என்றும், அவர் சட்டப்படியான மனைவி இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும் மேற்படி வாதி மற்றும் பிரதிவாதியின் தந்தை சின்னசுவாமியும் வேறுவேறு மதத்தை சார்ந்தவர்கள் என்பதால், அவர்களின் திருமணம் சட்டப்படி செல்லாது என்றும், அதனால் வாதி சின்னசுவாமி என்பவரின் மனைவி என்று கூறமுடியாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

**04.** மேலும் இந்த வாதி எந்த காலத்திலும் மேல் கூடலூரில் கதவு எண்.1/319 OVH ரோட்டு என்ற வீட்டில் சின்னசுவாமியுடன் மனைவியாக வசிக்கவில்லை என்றும், மேலும் வாதி, சின்னசுவாமியின் சட்டப்படியான வாரிசு என்று தாவா சொத்தில் மூன்றில் ஒரு பாகம் பெற எவ்வித உரிமையும் இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும் இந்த வாதி உண்மையிலும் 30 வருடங்களுக்கு மேலாக ஜோசப் ஸ்டான்லி என்பவரிடம் திருமணம் உறவில் இருந்து வந்த நிலையில், மேற்படி திருமண முறிவு பெற்ற பிறகும் அவருடன் வாழந்து வருவதாகவும், மேலும் இந்த வாதிக்கு ரதீஷ், டோலி மற்றும் நானு என்ற மூன்று மகன்கள் இருந்து அவர்களுடன் மேல்கூடலூரில் உள்ள கோக்கல் என்ற வீட்டில் வசித்து வருவதாகவும், மேலும் இந்த பிரதிவாதி 02-ஆம் பிரதிவாதியுடன் சேர்ந்து கூடலூர் வட்டாட்சியரிடம் வாரிசு

சான்றிதழ் பெற்றுள்ளதாகவும், ஆனால் இந்த வாதி தவறான சங்கதிகளை கூறி உண்மைகளை மறைத்து வாரிசு சான்றிதழ் பெற்றுவிட்டதாகவும், மேற்படி சான்றிதழ்கள் எந்த வகையிலும் வாதி, சின்னசுவாமியின் சட்டப்படியான வாரிசு என்பதை உறுதிபடுத்தாது என்றும், அதனால் வாதியின் வழக்கை தள்ளுபடி செய்யுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

***<u>01-ஆம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்த கூடுதல் எதிர்வழக்குரையின் சுருக்கம் பின்வருமாறு:</u>***

**05.** மேலும், தாவா 8-வது அட்டவணை சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சர்வே எண்.163/1 செம்பளா கிராமத்தில் உள்ள சொத்து எந்த காலத்திலும் பிரதிவாதியின் தந்தை சின்னசுவாமி சுவாதீனத்தில் இல்லை என்றும், மேலும் கதவு எண்.11/193 D என்பது செம்பளா கிராம சர்வே எண்.163/1-ல் இல்லை என்றும், அதற்கு வாதி எந்தவொரு ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றும், மேற்படி சொத்தை எவ்வித காரணங்களுமின்றி சேர்த்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

***<u>மேலும் இந்த 01-ஆம் பிரதிவாதி 20.10.2021-ஆம் தேதியன்று தாக்கல் செய்த கூடுதல் எதிர்வழக்குரையின் சுருக்கம்</u>***:-

**06.** வாதி அவருடைய பெயரை பாப்பாத்தி @ மேரி என்று கூறியுள்ளதை இந்த பிரதிவாதி மறுப்பதாகவும், மேலும் இந்த வாதி பிரதிவாதியின் தந்தை சின்னசுவாமியுடன் தவறான உறவுமுறையில் இருந்து வந்ததாகவும், அதனால் அவர் மனைவி என்று உரிமை கோரமுடியாது என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும் இந்த 01-ஆம் பிரதிவாதி மற்றும் 02-ஆம் பிரதிவாதியும் சேர்ந்து 03-ஆம் பிரதிவாதிக்கு தாவா C அட்டவணையில் உள்ள 5, 6 7

சொத்துக்களை விற்பனை செய்து விட்டதால் அதை பொறுத்து எந்தவொரு உரிமையும் கோரமுடியாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

***02-ஆம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்த எதிர்வழக்குரையின் சுருக்கம் பின்வருமாறு:***

**07.** மேற்படி 02-ஆம் பிரதிவாதி, 01-ஆம் பிரதிவாதி எதிர்வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகளையே தன்னுடைய எதிர்வழக்குரையிலும் குறிப்பிட்டுள்ளார்.

***04 மற்றும் 05-ஆம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்த கூடுதல் எதிர்வழக்குரையின் சுருக்கம் பின்வருமாறு:***

**08.** 01 , 02 பிரதிவாதியின் தந்தை சின்னசுவாமி என்பவர் வாதியின் கணவர் என்பது உண்மை இல்லை என்றும், அதை வாதி தான் நிரூபிக்க வேண்டும் என்றும், மேலும் வாதி, சின்னசுவாமியின் சட்டப்படியான வாரிசு என்பது பொய்யானது என்றும், அனைத்து ஆவணங்களிலும் 1 , 2 பிரதிவாதிகள் தான் இறந்து போன சின்னசுவாமியின் வாரிசுகள் என்பதை உறுதிபடுத்திக் குறிப்பிட்டுள்ளதாகவும், மேலும் வாதி எப்போதும் இறந்து போன சின்னசுவாமியின் சொத்தில் கூட்டு உரிமையாளராக இருந்தது இல்லை என்றும், மேலும் வருவாய்த்துறை ஆவணங்களில் சின்னசுவாமி இறந்த நிலையில் சந்தோஷ்குமார் மற்றும் ரஞ்சித்குமார் ஆகியோர்களின் பெயர்கள் மட்டுமே சேர்க்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும் வாதி சில ஆவணங்களை பொய்யாக உருவாக்கி சின்னசுவாமி இறந்த பிறகு அவரது சொத்தை அடையவேண்டி தயார் செய்துள்ளதாகவும், மேலும் வாதி எந்தகாலத்திலும் சின்னசுவாமியின் மனைவி இல்லை என்றும், அவர் சின்னசுவாமியுடன் கதவு எண்.1/319 என்ற

இடத்தில் வாழ்ந்ததாக கூறுவது பொய்யானது என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும் இந்த பிரதிவாதிகள் சட்டப்படி 11 ½ சென்ட் நிலத்தை நகர சர்வே எண்.H/6/58/1 மற்றும் H/6/107 -ல் உள்ளதை உரிய மறுபயன் கொடுத்து 1, 2 பிரதிவாதிகளிடமிருந்து கடந்த 17.06.2020-ஆம் தேதியன்று ஒரு பதிவு செய்யப்பட்ட ஆவணம் மூலம் கிரையம் பெற்றுள்ளார்கள். அதை கூடலூர் வட்டாட்சியர் கொடுத்த வாரிசு சான்றிதழ் மற்றும் சிட்டா ஆகிய ஆவணங்களின் அடிப்படையில் கிரையம் பெற்றதாகவும், அதனால் இந்த பிரதிவாதிகள் நல்ல எண்ணத்தின் அடிப்படையில் கிரையம் பெற்றார்கள் என்றும், நல்ல எண்ணத்தின் அடிப்படையில் இந்த 1, 2 பிரிதவாதிகளிடமிருந்து உரிய மறுபயனுக்கு தாவா சொத்தை கிரையம் பெற்றுள்ளார்கள் என்றும், ஒருவேளை இந்த வாதிக்கு ஏதேனும் பாகம் கிடைக்கத்தக்கதாக இருப்பின் சின்னசுவாமியின் இதர சொத்துக்களிலிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்று கூறி 4, 5, 6 பிரதிவாதிகளுக்கு எதிராக இந்த வழக்கை தள்ளுபடி செய்யுமாறு கேட்டுக்கொண்டுள்ளனர்.

09. வழக்குரை மற்றும் எதிர்வழக்குரைளை பரிசீலனை செய்து, வழக்கின் தீர்வுக்காக கடந்த 09.06.2022-ஆம் தேதியன்று கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது:-

***<u>எழுவினாக்கள் :</u>***

1) Whether Plaintiff is a legally wedded wife of late.P.Chinnaswamy ?

2) Whether suit schedule Item No.1 to 5 were purchased in the name of P.Chinnaswamy out of the sale amount of D1 D2's mother's property (or) Self acquired property of Late.P.Chinnaswamy ?

3) Whether suit schedule Item No.6 was purchased from sale of the Gold Jewels of defendant's mother (Or) Self acquired property of late.P.Chinnaswamy ?

4) Whether plaintiff is entitled to get Preliminary Decree in respect of 1/3 share of the suit schedule property?

5) To what other reliefs are entitled to plaintiff?

**10.** இவ்வழக்கு விசாரணையின்போது, வாதி பாப்பாத்தி என்பவர் வா.சா-01 ஆக விசாரிக்கப்பட்டு வாதி தரப்பில் வாசாஆ.1 முதல் வாசாஆ.21 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் வாசா.2 ஆக பாஸ்கரன் என்பவர் விசாரிக்கப்பட்டு அவர் மூலம் X1, X2 என்ற ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், பிரதிவாதிகள் தரப்பில் ஹசீனா ஹசீன் என்பவர் பிவாசா.1 ஆக விசாரிக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் பிசாஆ.1 முதல் பிசாஆ.10 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**11.** இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது மற்றும் வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

***<u>எழுவினா எண் : 01</u>***

*Whether Plaintiff is a legally wedded wife of late.P.Chinnaswamy ?*

***12.*** வாதி தரப்பில் இந்த வாதி இறந்து போன சின்னசுவாமியின் சட்டப்படியான மனைவி என்றும், 1, 2 பிரதிவாதிகள் மேற்படி சின்னசுவாமியின் மூத்த மனைவியின் மகன்கள் என்றும், மேற்படி சின்னசுவாமியின் முதல் மனைவியான சரோஜா என்பவர் 27.11.2002-ஆம் தேதியன்று இறந்துவிட்டதாகவும், அதற்கு பிறகே தான் சின்னசாமியை 20.12.2006-ஆம் தேதியன்று திருமணம் செய்து கொண்டு கணவன் மனைவியான சுமார் 10 வருடங்கள் வாழ்ந்ததாகவும், மேற்படி திருமணத்தை பதிவு அலுவலகத்தில் பதிவு செய்ததாகவும்

குறிப்பிட்டுள்ளார். மேலும் இந்த வாதிக்கும், ஒரு ஜோசப் ஸ்டான்லி என்பவருக்கும் திருமணம் நடைபெற்று மேற்படி திருமணம் IDOP.No.17/2005 என்ற எண்ணில் உதகை மாவட்ட நீதிமன்றத்தால் 14.10.2005-ஆம் தேதியிட்ட உத்தரவின் மூலம் இரத்து செய்யப்பட்டதாகவும், அவ்வாறு முதல் திருமணம் இரத்து செய்யப்பட்ட பிறகே இரண்டாவது திருமணம் செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

**13.** ஆனால் இந்த பிரதிவாதிகள் தரப்பில் இந்த 1, 2 பிரதிவாதி தரப்பில் மேற்படி வாதி ஜோசப் ஸ்டான்லி என்பவரின் மனைவி என்றும், அவர் 30 வருடங்களாக மேற்படி ஜோசப் ஸ்டான்லியுடன் வாழ்ந்துவிட்டு இந்த பிரதிவாதிகளின் தந்தை சின்னசுவாமியை திருமணம் செய்து மேற்படி சொத்தை அபகரிக்கவேண்டும் என்ற எண்ணத்திற்காக தான் மேற்படி விவாகரத்தை தவறான சங்கதிகளுடன் உண்மையை மறைத்து பெறப்பட்டுள்ளது என்றும் வாதிடப்பட்டது. மேலும் மேற்படி 1, 2 பிரதிவாதிகளின் தந்தை சின்னசுவாமி வாதியுடன் தவறான உறவில் இருந்ததாகவும், அவர் சின்னசுவாமியின் வைப்பாட்டி என்றும், சட்டப்படியான மனைவி இல்லை என்றும் எதிர்வாதம் செய்யப்பட்டது.

**14.** அதே பேல் வாதியின் பெயர் சம்ருனிஷா என்றும், அவர் ஒரு முகமதியர் என்றும், அவரது தந்தை பெயர் முகமது உஷைன் மற்றும் தாயார் பெயர் ஆயிஷம்மா என்றும், அதற்கு பிறகு கிறிஸ்த்துவ மதத்தை தழுவி விட்டார் என்றும், ஆனால் இந்து மதத்தை எப்போது தழுவினார் என்பது குறித்து எந்தவொரு சங்கதிகளும் இல்லை என்றும், அதனால் வாதியின் திருமணம் சட்டப்படி செல்லாது என்றும் எதிர்வாதம் செய்யப்பட்டது.

**15.** இதுகுறித்து வாதி தான் சின்னசுவாமியின் சட்டப்படியான மனைவி என்பதை நிரூபிக்கும் வகையில் அவர் வாசா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மேற்படி சின்னசுவாமியின் முதல் மனைவி 27.11.2022-ஆம் தேதியன்று இறந்துவிட்டதாக குறிப்பிட்டுள்ளார். அதனை நிரூபிக்க சரோஜா என்பவரின் இறப்பு சான்றிதழ் வாசாஆ.13 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வாசாஆ.13-ல் மேற்படி சரோஜா என்பவர் 27.11.2002-ஆம் தேதியன்று கோழிகோடு

மருத்துவமனையில் இறந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு மேற்படி சரோஜா இறந்த தேதிகள் குறித்து பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்கப்படவில்லை. இந்த நிலையில் மேற்படி IDOP.No.17/2005 என்ற எண்ணில் உதகை மாவட்ட நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு நகல் வாசாஆ.17 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதில் மாவட்ட நீதிமன்றம் 14.10.2005-ஆம் தேதியன்று வாதிக்கும், ஒரு ஜோசப் ஸ்டான்லி என்பவருக்கும் இடையேயான திருமணத்தை இரத்து செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. அதன் சான்றிட்ட நகல்கள் வாசாஆ.17 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இதை பொறுத்து பிரதிவாதிகள் அது மோசடியாக பெறப்பட்டதாக குறிப்பிட்டிருந்தாலும் மேற்படி உத்தரவானது ஒரு தகுதி வாய்ந்த மாவட்ட நீதிமன்றத்தால் இரத்து செய்து உள்ளநிலையில், அது எந்த வகையில் மோசடியானது என்பது பற்றி பிரதிவாதிகள் தரப்பில் தெரிவிக்கப்படவில்லை. அதனால் மேற்படி வாசாஆ.17-ன்படி சட்டப்படி மேற்படி வாதி ஒரு ஜோசப் ஸ்டான்லி என்பவரின் மனைவி என்ற பந்தம் உரிய நீதிமன்றத்தால் 14.10.2005-ஆம் தேதியன்று இரத்து செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்படி வாதிக்கும் இந்த 01-ஆம் பிரதிவாதியின் தந்தை சின்னசுவாமிக்கும் 20.10.2006-ஆம் தேதியன்று திருமணம் நடைபெற்று பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பதிவு சான்றிதழ் வாசாஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பதிவு செய்யப்பட்டதை பொறுத்து இந்த பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித மறுப்பும் தெரிவிக்கப்படவில்லை. ஆனால், மேற்படி வாதியானவர் சின்னசுவாமியின் வைப்பாட்டி என்றும் அவர் சட்டப்படியான மனைவி இல்லை என்றும் எதிர்வாதம் செய்துள்ளார்கள். இதுசம்மந்தமான ஆவணங்களின் அடிப்படையில் பார்க்கும்போது, மேற்படி சின்னசுவாமியின் மனைவி சரோஜா என்பவர் 2002-ஆம் வருடத்தில் இறந்துவிட்டார். அதே போல் 2005-ஆம் வருடத்திலேயே இந்த வாதி ஒரு ஜோசப் ஸ்டான்லி என்பவரிடமிருந்து தகுதி பெற்ற நீதிமன்றத்திலிருந்து விவாகரத்தும் பெற்றுவிட்டார். இவ்வாறு 2006-ஆம் வருடத்தில் மேற்படி சின்னசுவாமிக்கும், இந்த வாதிக்கும் திருமணம் நடைபெற்றுள்ளதால் மேற்படி திருமணம் நடைபெற்ற தேதியன்று மேற்படி சின்னசுவாமி மற்றும் வாதிக்கும் எந்தவொரு திருமணமும் நிலுவையில் இல்லாததால்

மேற்படி இருவருக்கும் இடையே வாசாஆ.8-ன்படி பதிவு செய்யப்பட்ட திருமணம் சட்டப்படி செல்லத்தக்கது ஆகும்.

**16.** இந்த நிலையில், பிரதிவாதிகள் தரப்பில் மேற்படி வாதியானவர் பிறப்பில் முகமதியராக இருந்து அதற்கு பிறகு கிறிஸ்த்துவ மதத்திற்கு மாறிவிட்டதாக குறிப்பிட்டுள்ளார். அதனை பொறுத்து இந்த வாதி தரப்பிலும் குறிப்பிட்டு எவ்வித மறுப்பும் தெரிவிக்கப்படவில்லை. அதற்கு பிறகு எப்போது இந்துவாக மதம் மாறி பாப்பாத்தி என்று பெயர் மாற்றினார் என்று எவ்வித சங்கதிகளும் வழக்குரையில் குறிப்பிடவில்லை. வாதி தரப்பில் திருமணத்தின்போதே பாப்பாத்தி என்று தன்னுடைய பெயரை மாற்றிவிட்டதாக சாட்சியம் அளித்துள்ள நிலையில், அதனை உறுதிபடுத்தும் விதத்தில் தாக்கல் செய்யப்பட்ட மேற்படி திருமண பதிவு சான்றிதழான வாசாஆ.8-லிலும் வாதியின் பெயர் பாப்பாத்தி என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

**17.** அதற்கு பின்னிட்டு வாதியின் ஆதார் கார்டிலும் வாதியின் பெயர் பாப்பாத்தி என்றும், தந்தை பெயர் முகமது உசைன் என்றும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் வாக்காளர் அடையாள அட்டை 20.08.2010 ஆம் தேதியன்று பெறப்பட்டுள்ளது அதிலும் வாதியின் பெயர் பாப்பாத்தி என்றும் கணவர் பெயர் சின்னசுவாமி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி வாக்காளர் அடையாள அட்டை வாசாஆ.9 வரிசையாக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**18.** அதனால் இந்த வாதி இந்து மதத்தை தழுவவில்லை என்பதற்கு எவ்வித ஆதாரங்களும் இல்லை என்ற நிலையில், திருமணம் நடந்த 2006-ஆம் வருடம் அவர் பெயர் மாற்றப்பட்டுள்ளது. அதற்கு பின்னிட்டு வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் கார்டு ஆகியவைகளிலும் வாதியின் பெயர் பாப்பாத்தி என்றே குறிப்பிடப்பட்டுள்ளதை அறிய முடிகிறது. மேலும், 01, 02 பிரதிவாதிகள் தரப்பில் வாதி சின்னசுவாமி என்பவரின் சட்டப்படியான மனைவி என்பதை பொறுத்து கடுமையாக எதிர்வாதம் செய்து இருந்தாலும் கூட இந்த 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் இந்த வாதியை எவ்வித குறுக்குவிசாரணையும் செய்யாமலும், வழக்கு விசாரணைக்கு ஆஜராகமலும் இல்லாத நிலையிலும், இந்த நீதிமன்றம் அவர்களுக்கு எதிராக ஒருதலைபட்சமாக தீர்மானம் செய்துள்ளது.

ஆகவே, மேற்படி விவாதங்களின்படி இந்த வாதி, 1, 2 பிரதிவாதிகளின் தந்தையான சின்னசுவாமியின் சட்டப்படியான வாரிசு என்று இந்த நீதிமன்றம் வாதிக்கு ஆதரவாக இந்த எழுவினாவைப் பொறுத்து தீர்மானம் செய்துள்ளது.

**எழுவினா எண் : 02**

**Whether suit schedule Item No.1 to 5 were purchased in the name of P.Chinnaswamy out of the sale amount of D1 D2's mother's property (or) Self acquired property of Late.P.Chinnaswamy ?**

**19.** இந்த வாதி தரப்பில் தாவா 1 முதல் 5 வரை உள்ள சொத்துக்கள் இந்த வாதியின் கணவர் சின்னசுவாமி என்பவரால் கிரையம் பெறப்பட்ட சுய சம்பாத்திய சொத்துக்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை உறுதிபடுத்தும் விதமாக தாவா 1 முதல் 3 அட்டவணை சொத்துக்களுக்கு சின்னசுவாமியின் பெயரில் கிரையம் பெற்றதற்கான கிரையப் பத்திரங்கள் வாசாஆ 1 முதல் 3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதே போல், தாவா 4-வது அட்டவணை சொத்தான கிரையப் பத்திரம் வாசாஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் தாவா 5-வது அட்டவணை சொத்துக்கள் சின்னசுவாமியின் பெயரில் கிரையம் பெறப்பட்டுள்ள நிலையில், மாறாக நிரூபிக்கப்படாத வகையில் மேற்படி சொத்து சின்னசுவாமியின் தனிப்பட்ட சொத்துக்கள் என்றே இந்த நீதிமன்றம் தீர்மானம் செய்யவேண்டியுள்ளது.

**20.** ஆனால், இந்த பிரதிவாதிகள் தரப்பில் தாவா 1 முதல் 5 வரை உள்ள சொத்துக்கள் தனது தாயாரான சரோஜா என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் திருச்சி காட்டூரில் இருந்ததாகவும், அதனை 2005-ஆம் வருடத்தில் இந்த 1, 2 பிரதிவாதிகள் மற்றும் சின்னசுவாமியும் ரூ.50 இலட்சத்திற்கு அதிகமான தொகைக்கு விற்று மேற்படி கிரையத் தொகையைக் கொண்டு தான் மேற்படி 5 சொத்துக்களும் சின்னசுவாமியின் பெயரில் கிரையம் வாங்கப்பட்டதாக எதிர்வாதம் செய்யப்பட்டது. மேலும் சின்னசுவாமிக்கும் எந்தவொரு வருமானமும் இல்லை என்றும், குடும்பம் நடத்துவதற்கு சிரமமப்பட்டதாகவும் வாதிடப்பட்டது.

**21.** ஆனால் மேற்படி சின்னசுவாமி என்பவர் வனத்துறையில் வனசரகராக மேற்படி காலக்கட்டங்களில் பணிபுரிந்துள்ளார். அவ்வாறு இருக்கும்போது அரசு ஊழியரான சின்னசுவாமி குடும்பம் நடத்துவதற்கே சிரமம்பட்டார் என்றும், அவருக்கு சொத்து வாங்கும் அளவிற்கு வசதி இல்லை என்பதும் ஏற்க இயலாதது ஆகும். அதே சமயம், மேற்படி சின்னசுவாமி 1, 2 பிரதிவாதிகளுடன் சேர்ந்து தன்னுடைய முதல் மனைவி சரோஜாவிற்கு பாத்தியப்பட்ட சொத்தை ரூ.50 இலட்சத்திற்கு மேல் விற்பனை செய்து மேற்படி தொகையை கொண்டு தான் தாவா சொத்துக்களை வாங்கினார் என்பதைப் பொறுத்து பார்க்கும் போது 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் மேற்படி வீதம் எதிர்வாதம் மட்டுமே செய்யப்பட்டதே தவிர, மேற்படி சொத்து எந்த சர்வே எண்ணில் இருந்தது எந்த தேதியில் யாருக்கு விற்பனை செய்யப்பட்டது என்பது குறித்து எதுவும் தங்கள் எதிர்வழக்குரையில் கூறவில்லை. அதே போல் கிரையத் தொகை எவ்வளவு என்று கூறாமல் தோராயமாக ரூ.50 இலட்சத்திற்கு மேல் என்று கூறியதிலிருந்தே மேற்படி எதிர்வாதம் ஆதரமற்ற வழக்கிற்காக செய்யப்படும் எதிர்வாதமாகவே கருதவேண்டியுள்ளது. மேலும் அதனை நிரூபிக்கும் விதத்திலும் 1, 2 பிரதிவாதிகள் இந்த நீதிமன்றத்தில் ஆஜராகி வாதியை குறுக்குவிசாரணை செய்து நிரூபிக்கவில்லை என்பதால், மேற்படி 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் செய்யப்பட்ட மேற்படி எதிர்வாதம் தகுந்த சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் மூலம் நிரூபிக்கப்படவில்லை என்றும், அதனால் 1 முதல் 5 வரை உள்ள அட்டவணை சொத்துக்கள் சின்னசுவாமியின் சுய சம்பாத்திய சொத்துக்ள் என்றே இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**எழுவினா எண் : 03**

**Whether suit schedule Item No.6 was purchased from sale of the Gold Jewels of defendant's mother (Or) Self acquired property of late.P.Chinnaswamy ?**

**22.** வாதி தரப்பில் தாவா சொத்துக்கள் அனைத்தும் வாதியின் சுய சம்பாத்திய சொத்துக்கள் என்று வாதம் செய்யப்பட்டுள்ள நிலையில், இந்த பிரதிவாதிகள் தரப்பில் தாவா 6, 7 அட்டவணை சொத்துக்கள்

தாயாரின் நகைகளை விற்று அதன் மூலம் வந்த பணத்தை கொண்டு சின்னசுவாமியின் பெயரில் மேற்படி சொத்துக்கள் வாங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. தாவா 6-வது அட்டவணை சொத்தில் சின்னசுவாமி பெயரில் கிரையம் பெற்றதாக கிரையப் பத்திரம் வாதி தரப்பில் வாசாஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், தாவா 7 வது அட்டவணை சொத்தில் கிரையம் பெற்றதற்கான கிரையப் பத்திரம் வாசாஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஆகவே மேற்படி சொத்தின் 6, 7 சொத்துக்களை பொறுத்து சின்னசுவாமி என்பவரின் பெயரில் கிரையம் பெற்றுள்ளதால், மாறாக நிரூபிக்கப்படாத வகையில் மேற்படி சொத்து சின்னசுவாமியின் சுய சம்பாத்திய சொத்துக்களாகவே கருதவேண்டியுள்ளது. இந்த நிலையில், 1, 2 பிரதிவாதிகள் எதிர்வாதம் செய்ததை போல், எந்த தேதியில் எவ்வளவு நகைகள் 1, 2 பிரதிவாதிகளின் தாயாருக்கு பாத்தியப்பட்டது என்று எந்தவொரு விவரங்களும் 1, 2 பிரதிவாதிகள் எதிர்வழக்குரையில் கூறவில்லை. அதே போல், மேற்படி சங்கதிகளை நிரூபிக்கும் வகையில் அவர்கள் இந்த நீதிமன்றத்தில் ஆஜராகி எந்தவொரு சாட்சியமும் அளிக்கவில்லை. அதனால் இந்த பிரதிவாதிகளின் எதிர்வாதம் போதிய சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் மூலம் நிரூபிக்கப்படவில்லை என்றும் முடிவு செய்து தாவா 6, 7 சொத்துக்கள் சின்னசுவாமியின் சுய சம்பாத்திய சொத்துக்கள் என்றே இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**எழுவினா எண் : 04**

**Whether plaintiff is entitled to get Preliminary Decree in respect of 1/3 share of the suit schedule property?**

**23.** வாதி தரப்பில் மேற்படி வாதி சின்னசுவாமி என்பவரின் சட்டப்படியான மனைவி என்றும், 1, 2 பிரதிவாதிகள் சின்னசுவாமியின் முதல் மனைவியின் மகன்கள் என்றும், மேற்படி சின்னசுவாமி, வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகளை விட்டுவிட்டு 19.02.2016-ஆம் தேதியன்று

இறந்துவிட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதுகுறித்து அவரது இறப்பு சான்றிதழ் வாசாஆ.10 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் இதுகுறித்து மேற்படி சின்னசுவாமி இறந்ததைப் பொறுத்து இந்த பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித ஆட்சேபனையும்தெரிவிக்கவில்லை. அதனால் மேற்படி சின்னசுவாமி மனைவி என்ற அடிப்படையில் தாவா சொத்தில் வாதிக்கு மூன்றில் ஒரு பாகம் உரிமையுள்ளது என்று கூறி மேற்படி பாகத்தை பொறுத்து முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்குமாறு கோரியுள்ளார்.

**24.** ஆனால் பிரதிவாதிகள் தரப்பில் மேற்படி வாதி சின்னசுவாமி என்பவரின் சட்டப்படியான மனைவி இல்லை என்றும், அவர் வைப்பாட்டி என்றும் வாதம் செய்யப்பட்டது. அதனை ஏற்கனவே இந்த நீதிமன்றம் இந்த எழுவினா எண்.1-ல் நிராகரித்து வாதி இறந்து போன சின்னசுவாமியின் சட்டப்படியான மனைவி என்று முடிவு செய்துள்ளது. அதே போல் 1, 2 பிரதிவாதிகள் மேற்படி சொத்து சின்னசுவாமியின் சுய சம்பாத்திய சொத்துக்கள் இல்லை என்றும், தங்களது தாயாரின் சொத்து மற்றும் நகைகளை விற்று தான் அதன் மூலம் வந்த தொகையை கொண்டு சின்னசுவாமி பெயரில் தாவா 1 முதல் 7 அட்டவணை சொத்துக்களை கிரையம் பெறப்பட்டதாக குறிப்பிட்டிருந்தாலும், அதனை ஏற்கனவே இந்த நீதிமன்றம் எழுவினா எண்.2 மற்றும் 3-ல் நிராகரித்து அது சின்னசுவாமியின் சுய சம்பாத்திய சொத்துக்கள் என்று இந்தநீதிமன்றம் முடிவு செய்துள்ளது.

**25.** அதனால் தாவா சொத்து 1 முதல் 7 வரை உள்ள அட்டவணை சொத்துக்களில் இந்த வாதிக்கு சின்னசுவாமியின் சட்டப்படியான மனைவி என்ற முறையில் இந்து வாரிசுரிமை சட்டப்பிரிவு 8-ன் கீழ் மூன்றில் ஒரு பாகம் உரிமை உள்ளது. ஆனால் அதே சமயம், இந்த 4, 5 பிரதிவாதிகள் தாவா சொத்தில் 1 முதல் 3 வரையுள்ள அட்டவணை சொத்தை தாங்கள் நல்ல எண்ணத்தின் அடிப்படையில் கிரையம்

பெற்றதாகவும், கிரையம் பெற்ற சமயத்தில் இந்த 1 , 2 பிரதிவாதிகள் மட்டுமே வாரிசு என்று வாரிசு சான்றிதழ் கூடலூர் வட்டாட்சியர் வழங்கியுள்ளதாகவும், மேலும் வருவாய்த்துறை ஆவணங்களில் 1, 2 பிரதிவாதிகளின் பெயர் இருந்ததால் தான் நல்ல எண்ணத்தின் அடிப்படையில் கிரையம் பெற்றதாகவும், அதனால் தாங்கள் கிரையம் பெற்ற சொத்தை பொறுத்து வாதி எவ்வித பாகப்பிரிவினையும் கோரமுடியாது என்றும், அவரது பாகத்தை பொறுத்து இதர சொத்துக்களில் அவர் பாகப்பிரிவினை கோரிக்கொள்ளலாம் என்றும் வாதிடப்பட்டது. ஆனால் இதுகுறித்து பார்க்கும் போது, மேற்படி கூடலூர் வட்டாட்சியர் வழங்கிய வாரிசு சான்றிதழ் வாசாஆ.11 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வாரிசு சான்றிதழ் 06.09.2016 ஆம் தேதியன்று வழங்கப்பட்டுள்ளது. அதில் வாதி பெயர் இரண்டாம் மனைவி என்று குறிப்பிட்டு வாரிசுதாரராக காட்டப்பட்டுள்ளது. அதே போல் 2017-ஆம் வருடத்தில் வாதியின் பெயரை சிட்டாவில் சேர்க்க உதகமண்டலம் வட்டாட்சியரால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அது வாசாஆ.12 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையில் இந்த வாதி பாகப்பிரிவினை கோரி 2018-ஆம் வருடம் இந்த நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து உள்ள நிலையில், இந்த 4, 5 பிரதிவாதிகள் வாசாஆ.15-ன்படி 17.06.2020-ஆம் தேதியன்று கிரையம் பெற்றுள்ளார். ஆனால் இந்த வழக்கு நிலுவையில் இருந்தபோது கிரையம் பெற்றுள்ளார்கள். ஒரு வேளை இந்த 4, 5 பிரதிவாதிகள் நல்ல எண்ணத்தின் அடிப்படையில் தாவா சொத்துக்களை கிரையம் பெற்றிருந்தாலும் கூட அவர்கள் இந்த வழக்கு நிலுவையில் இருக்கும்போது கிரையம் பெற்றுள்ள நிலையில், அவர்கள் நல்ல எண்ணத்தின் அடிப்படையில் தாங்கள் கிரையம் பெற்ற பாகத்தை தவிர்த்து இதர சொத்துக்களில் வாதிக்கு பாகத்தை ஒதுக்கி தருமாறு கோரிக்கை வைக்க அருகதையற்றவர்கள் ஆவார்கள். 4, 5 பிரதிவாதிகள், 1, 2 பிரதிவாதிகளின் உரிமைகளை விட அதிகப்படியான உரிமைகள் எதுவும் பெற உரிமையுடையவர்கள் அல்ல. அதனால் மேற்படி 4, 5

பிரதிவாதிகள் வழக்கு நிலுவையில் இருக்கும் போது மேற்படி கிரையம் பெற்ற பிசாஆ.10-ன்படி எவ்வித உரிமையும் மேற்படி சொத்தில் கோரமுடியாது என்றும், அது வாதிக்கு உள்ள பாகத்தைப் பொறுத்து எந்த விதத்திலும் பிசாஆ.10 வாதியை கட்டுப்படுத்தாது என்றும் முடிவு செய்கிறது.

**26.** அதேசமயம், இந்த 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் தாவா 8-வது அட்டவணை சொத்து இந்த வழக்கிற்கு அவசியம் இல்லாதது என்றும், அது சின்னசுவாமி என்பவருக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு எந்தவொரு ஆவணங்களும் இல்லை என்று எதிர்வாதம் செய்யப்பட்டுள்ள நிலையில், மேற்படி வீட்டு வரி இரசீதை இந்த வாதிதரப்பில் வாசாஆ.16 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதில் செம்பளாவில் உள்ள கதவு எண்.1/193 டி என்று சின்னசுவாமியின் பெயரில் வரிவிதிப்பு செய்யப்பட்டது. ஆனால் அதன் சர்வே எண் வேறு என்று எதிர்வாதம் செய்து இருந்தாலும் அதனை நிரூபிக்கும் வகையில் இந்த பிரதிவாதிகள் எந்தவொரு ஆவணங்களும் சாட்சியங்களும் தாக்கல் செய்யப்படாத நிலையில், மேற்படி 1 முதல் 8 வரை உள்ள சொத்துக்கள் இறந்துபோன சின்னசுவாமி என்பவரின் தனிப்பட்ட சொத்துக்கள் என்றும், மேற்படி வாதி சின்னசுவாமியின் சட்டப்படியான மனைவி என்பதால் அவர் மேற்படி சொத்தில் மூன்றில் ஒரு பாகம் பெற உரிமையுடையவர் என்றும், இந்த எழுவினாவைப் பொறுத்து இந்த நீதிமன்றம் வாதிக்கு ஆதரவாக தீர்மானம் செய்கிறது.

<u>எழுவினா எண் : 05</u>

**To what other reliefs are entitled to plaintiff?**

**27.** ஏற்கனவே இந்த நீதிமன்றம் அனைத்து எழுவினாக்களையும் வாதிக்கு ஆதரவாக தீர்மானம் செய்துள்ள நிலையில், இதர பரிகாரங்கள் எதுவும் வாதிக்கு கிடைக்கத்தக்கது

அல்ல என்று இந்த எழுவினாவைப் பொறுத்து இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

## முடிவு

முடிவாக, வாதியின் வழக்கு செலவுத்தொகையுடன் அனுமதி செய்து, தாவா சொத்தில் மூன்றில் ஒரு பாகம் பெற வாதி உரிமையுடையவர் என்று முடிவு செய்து வாதிக்கு ஆதரவாக முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுக்கப்பட்டு, கனிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்துப் பார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2023-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 03-ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

C SRIDHAR Digitally signed by C SRIDHAR Date: 2023.10.03 06:00:14 +0530

சார்பு நீதிபதி,
உதகமண்டலம்.

**வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சியங்கள் :-**

வா.சா- 01 : பாப்பாத்தி
வா.சா- 02 : பாஸ்கரன்

**வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள்:-**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ-01 | : | 15.09.2005-ஆம் தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் பதிவு அலுவலக நகல் |
| வா.சா.ஆ-02 | : | 30.06.2004-ஆம் தேதியிட்ட கிரையப் பத்திரத்தின் பதிவு அலுவலக நகல். |
| வா.சா.ஆ-03 | : | 27.09.2004-ஆம் தேதியிட்ட கிரையப் பத்திரத்தின் பதிவு அலுவலக நகல். |
| வா.சா.ஆ-04 | : | 21.11.2003-ஆம் தேதியிட்ட கிரையப் பத்திரத்தின் பதிவு அலுவலக நகல். |
| வா.சா.ஆ-05 | : | 13.02.2012-ஆம் தேதியிட்ட கிரையப் பத்திரத்தின் பதிவு அலுவலக நகல். |

வா.சா.ஆ-06 : 08.06.2000-ஆம் தேதியிட்ட கிரையப் பத்திரத்தின் பதிவு அலுவலக நகல்.

வா.சா.ஆ-07 : 26.09.2000-ஆம் தேதியிட்ட கிரையப் பத்திரத்தின் பதிவு அலுவலக நகல்.

வா.சா.ஆ.08 : 20.12.2006-ஆம் தேதியிட்ட திருமண பதிவு சான்றிதழ் பதிவு அலுவலக நகல்.

வா.சா.ஆ.09 : வாதியின் ஆதார்டு மற்றும் வாக்காளர் அடையாள அட்டையின் நகல் ( அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது)

வா.சா.ஆ.10 : சின்னசுவாமியின் இறப்பு சான்றிதழ்.

வா.சா.ஆ.11 : சின்னசுவாமியின் வாரிசு சான்றிதழ்.

வா.சா.ஆ.12 : வட்டாட்சியரின் பட்டா மாறுதல் உத்தரவு

வா.சா.ஆ.13 : சரோஜாவின் இறப்புச் சான்றிதழ்

வா.சா.ஆ.14 : சொத்து தொடர்பான 3 சர்வே எண்களுக்கான வில்லங்கச் சான்றிதழ்கள்.

வா.சா.ஆ.15 : 17.06.2020-ஆம் தேதியிட்ட கிரையப் பத்திர பதிவு அலுவலக நகல்

வா.சா.ஆ.16 : கூடலூர் நகராட்சியில் வழங்கிய இரசீது அசல்

வா.சா.ஆ.17 : IDOP-17/2005 என்ற எண்ணின் உத்தரவு மற்றும் உத்தரவாணையின் நகல் சான்றிட்ட வரிசைகள்.

வா.சா.ஆ.18 : சர்வே எண்.58/1-ன் Computerized Chitta.

வா.சா.ஆ.19 : 08.11.2016-ஆம் தேதியிட்ட பட்டா மாறுதல் உத்தரவு.

வா.சா.ஆ.20 : கூடலூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் அசல் வழக்கு எண்.45/2021-ன் வழக்குரையின் சான்றிட்ட நகல்.

வாசா.ஆ.21 : 28.01.1998-ஆம் தேதியிட்ட கிரையப் பத்திரத்தின் நகல்.

**பிரதிவாதிகள் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சியங்கள்:-**

பி. வா.சா- 01 : ஹசீனா ஹசீன்

**பிரதிவாதிகள் தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள்:-**

பி.வா.சா.ஆ.1 : 23.09.1991-ஆம் தேதியிட்ட கிரையப் பத்திரத்தின் அசல்

பி.வா.சா.ஆ.2 : 23.09.1991-ஆம் தேதியிட்ட ஆவண எண்.1356 கிரையப் பத்திரத்தின் அசல்

பி.வா.சா.ஆ.3 : 30.06.2004-ஆம் தேதியிட்ட கிரையப் பத்திரத்தின் அசல்

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.4 | : | 27.09.2004-ஆம் தேதியிட்ட கிரையப் பத்திரத்தின் அசல் |
| பி.வா.சா.ஆ.5 | : | 15.09.2005-ஆம் தேதியிட்ட கிரையப் பத்திரத்தின் அசல் |
| பி.வா.சா.ஆ.6 | : | சர்வே எண்.58/1-ன் சிட்டா நகல் |
| பி.வா.சா.ஆ.7 | : | சர்வே எண்.107-ன் சிட்டா நகல் |
| பி.வா.சா.ஆ.8 | : | சர்வே எண்களின் கோரலேசன் சான்றிதழ் |
| பி.வா.சா.ஆ.9 | : | கிஸ்து இரசீது |
| பி.வா.சா.ஆ.10 | : | 17.06.2020-ஆம் தேதியிட்ட கிரையப் பத்திரத்தின் அசல் |

**பிசா.2 மூலம் X-ஆக குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள்:-**

| | | |
|---|---|---|
| X-01 | : | Life Insurance Corporation of India- ன் பாலிஸி நகல். |
| X-02 | : | Life Insurance Corporation of India- ன் பாலிஸின் மூலம் பணம் கொடுக்கப்பட்டதற்கான ஆவணங்களின் நகல். |

C SRIDHAR
Digitally signed by C SRIDHAR
Date: 2023.10.03 06:00:20 +0530

**சார்பு நீதிபதி,**
**உதகமண்டலம்.**

**சார்பு நீதிமன்றம், உதகமண்டலம்**

**அசல் வழக்கு எண். 100/2018**

**நாள்: 03.10.2023.**

**வரைவு/ உண்மை தீர்ப்புரை**